அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள். விளக்கம் சொல்கிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

*திரு. பரிதி இளம்வழுதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து 2, 3 நாட்களுக்கு முன்பே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த உண்டியல் திருட்டு தானே? (குறுக்கீடு) அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அறைக்கு வாருங்கள். விளக்கம் சொல்கிறேன். திரு. ஜெ. அன்பழகன் (குறுக்கீடு) திரு. அன்பழகன் சொல்லுங்கள்.....*

திரு. பரிதி இளம்வழுதி: *நான் கொடுத்து 2, 3, நாட்கள் ஆகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. தாங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். நான் விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை. உட்காருங்கள்.*

(அ) கிழக்குக் கடற்கரைச் சாலையில் அதிகமான கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதாக 'இந்து' நாளிதழ் செய்தி—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *இன்று 'இந்து' நாளிதழில் சாலை பற்றிய விவரங்கள் செய்தியாக வந்ததால் இந்த விவர அறிக்கையை நான் தெரிவித்தேன். கட்டடங்கள் பற்றிய விவர அறிக்கை வந்தவுடன் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜெ. அன்பழகன்.*

திரு. ஜெ. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனியில் பட்டப் பகலில்..*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அன்பழகன், அது நடைபெற்ற செய்தி, அதைக் கொடுத்திருக்கிறீர்கள். அறைக்கு வாருங்கள். விளக்கம் தருகிறேன். திரு. இரா. திருமாவளவன்.*